802

பதிவு எண்—M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்ருண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனுர் [redacted]

கிளை--7 குருகுலம், யாம்பாக்கம்; மன்மத, ஆனி ௨௭ 1—7—56 தளிர்-39

## சொல்லின் செல்வர் [redacted]

பேராசிரியர் அவர்கள் முத்தமிழ் வித்தகர் தேன் சொட்டும் நடையிலே, தித்திக்கத் தித்திக்க எழுதும் எழுத்தாளர். “கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்” என்று வள்ளுவர் கூறும் சொல் இலக்கணத்திற்கு இலக்கியமாய்த் திகழும் இன்சொற் கொண்டல்.

அவரது எழுத்து நடையும் பேச்சு நடையும் தனித் தன்மைத்து சிறிய சொற்ருெடர்கள்; செவிக்கு இனிமை பயக்கும் சிங்காரச் சொற்கள்; கருத்தாழமும், பொருட் செறிவும் பொதிந்த எதுகை, மோனைகள்—இவற்றோடு இலக்கணம் பிறழா எழுத்து நடை, சேதுப்பிள்ளையின் செந்தமிழ் நடை. பேச்சு நடையும் அப்படியே. தங்கு தடையற்ற நீரோட்டம் போன்ற சொல்லோட்டம்; பழந்தமிழ்க் கருவூலங்களில் மறைந்துகிடக்கும் மாணிக்கச் சொற்களை எடுத்தாளல்; வழுக்கியும் வன்சொல் வாராத பெருந்தகைமை; மின்ஞது, இடிக்காது உள்ளத்தை ஈர்க்கும் நாநலம்—இவை பேராசிரியரின் பேச்சு நடையின் நயங்கள்.

திரு. சேதுப்பிள்ளை அவர்கள் சிறந்த ஆராய்ச்சியாளர்—“ஊரும் பேரும்” சான்று; சமயப் பற்று மிக்க சிவநெறிச் செல்வர்—“வேலும் வில்லும்” சான்று கூறும்; உண்மைத் தமிழறிஞர்களைப் போற்றுபவர்—“கால்டுவெல் ஐயர் சரிதம்” படித்தால் போதும். பொதிகைத் தென்றலென இன்பம் பயப்பவர்—“கடற் கரையிலே” சந்தித்தால் காற்றை அனுபவிக்கலாம். இன்னும் வழிவழி வள்ளுவர், “திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகாரக் கதை” ஆகிய நூல்கள் ஆசிரியரின் ஆற்றலுக்கு உரைகல்லாக விளங்குகின்றன

பேராசிரியரின் “தமிழின்பம்” என்ற செந்தமிழ் நூல், பாரத அரசாங்கத்தார் நிறுவிய, “இலக்கியக் கழகத்” தாரால் (Sahitya Academy), சுதந்திரம் புலர்ந்த பின்பு வெளிவந்த தமிழ் நூல்களில் தலைசிறந்தது என்று தேர்ந்தெடுக்கப்பட்டு, ஐயாயிரம் ரூபாய்கள் பரிசு பெற்றுள்ளது. நூலிலே, ஆசிரியர் ஒரு மாபெரும் இரசிகராக மாறி, இரசனைச் சுவையில் நம்மையும் ஆழ்த்தி, தாம் பெற்ற தமிழின்பத்தை ஏனைய தமிழருக்கும் வாரி வழங்கியுள்ளார்.

பேராசிரியர் அவர்கள் வெறும் சொற் செல்வராக மட்டுமின்றி, கொடைச் செல்வராகவும் திகழ்கின்றார். தாம் பெற்ற பரிசோடு மேலும் பத்தாயிரம் சேர்த்துச் சென்னைப் பல்கலைக் கழகத்தின் தமிழ் வளர்ச்சிக்குத் தந்ததால்.

இத்தகைய மதிநலம், பண்பு நலம், தமிழ் நலம் வாய்ந்த சேதுப் பெருமகனர், செந்தமிழ்க் கடவுள் செந்தில்வேல் முருகன் திருவருளாலும், தமிழன்னையின் அருட்பாலிப்பாலும், பன்னெடுங்காலம் இசைபட வாழ்ந்து, ஆட்சிபீடம் ஏறப்போகும் அருந்தமிழுக்குப் பெருந்தொண்டு புரிய எல்லாம் வல்ல இறைவன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்!

—‘மணி மொழி.’

# "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

**7-ம் ஆண்டுக் கையொப்பம்**
**(8-10-54 முதல்)**

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு . | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் P. O.
(தென் இந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா."
—புறநானூறு.


| இலை | மன்மத, ஆனி, | தளிர் |
|---|---|---|
| 7 | 1-7-55 வெள்ளி. | 39 |


## காவிய நயம்

பண்பு வாய்ந்த பண்டைத் தமிழ் நாட்டிலே கணக்கற்ற காவியங்கள் தோன்றிக் கண்ணும் கருத்துமாய்க் கடைப்பிடிக்கப்பட்டுக் கைதழுவப்பட்டன சமீபகாலத்திலே; சிறப்பு வாய்ந்த ஒரு சிலரால் சீர்தூக்கக் கூடா தென்று சீர்தூக்கிப் பாராட்டப் பட்டு வருகின்றன, சிறிது காலமாக.

அன்பும் அறனும் உடைய தாய், பண்பும் பயனும் மிக்க தாய், அறிவும் ஆற்றலும் நிறைந்ததாய், சொல்லும் பொருளும் சேர்ந்ததாய், படிப்போர் மனத்திலே பசுமரத்தாணி போல, பாலிலே தேன் கலந்ததுபோல, பரவி அறிவை விளக்க வைப்பதுதான் அன்னோர் கூற்று!

காவிய நலங்களெல்லாம் கனிர் தொழுகும் நூலாம் கம்பர் செய் நூல்; வாழ்க்கையின் வரம்புகளை வரையறுத்துக் கூறும் நூலாம் வள்ளுவர் செய் நூல்; இனிய பண்புகளெல்லாம் இளகிக் கிடக்கும் நூலாம் இளங்கோவின் நூல்; சத்துடைக் கருத்தைக் கொண்டு சால்பு மிக்குத் திகழ வேண்டிச்சத்தியற்றுக் கிடக்கும் சாரரை (கூட்டத்தாரை)ச் சால் படையச் செய்வதாம் சாத்தனரின் நூல்; இனிய கருத்தைக் கொண்டு, ஏங்கிக் கிடப்போரை எக்காளம் போடச் செய்து முக்காலமும் முன்னேறிச் செல்லச் செய்யும் இம் முன்னோரின் நூல்களை நாம் என்னென்று போற்றுவது!

மூர்க்கச் செய்கையால் மூலப் பொருளை இழந்து, முன்னேறிச் செல்ல வழி வகுத்து, கானலும் கடுமையும் கடந்து இல்லறக் கிழத்தியின் இனிய காற் சிலம்பைப் பகர வேண்டிப் பாண்டியனிடம் சென்ற கோவலனைப் பொற் கொல்லன் சூழ்ச்சியினல் கொலைகளக் கோலத்துடன் கண்ட கண்ணகி, காற்சிலம்பின் கருத்தை விளக்கிச் சீரிழந்த காரணத்தால் சீற்றமுற்றுச் சென்ற போது கடந்த பிறவியின் கணக்கை உணர்த்தி ஊழ்வலியை உறுதிப் படுத்தியதும், ஆராயாது செய்த அரசனை அழித்தலுக் குள்ளாக்கியதும், "தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழு தெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்பதைச் சிறப்புடன் உணர்த்துவதுமான சிலப்பதிகாரந்தான் என்னே!

நவீன காலத்திலே, ஆம்! சீருற்றுச் சிறப்புறும் தன்மையிலுள்ள இவ் உலகிலே நாம் வாழும் வழிவகைகளையும் பெண்டிர் பெருமையினையும், அரசனின் அற நெறிகளையும் எல்லையற்றுக் கிடக்கும் இறைவனின் இனிமைகளையும், செம்மையுடன் உணர்த்தும் நம் செங்நாப் போதாரின் நூல்தான் சிறப் பன்றோ?!

நாட்டியக் கலையிலே நன்மை பெற்று அரும் பெரும் காலத்தை அவத்தே நடத்தி இன்புற்று வாழ்ந்த அவள், வார்த்தை குற்றத்தினல் தன்வழி யேகிய தன் காதலனைக் கண்டு, உலகத்தின் உண்மையினை உணர்ந்து வாழ்க்கையின் வழிவகைகளை யறிந்து தப்பு வழியின் தன்மைகளை உணர்ந்து, குலச் செய்கையின் குறைவினல் தன் குழந்தையை, ஆம் மணிமேகலையை, ஆண்டவனின் அருட்பணிக்கு ஏகச் செய்த எழில்மிக்க இனிமை தான் இழிவாமோ?

பண்புடை நாட்டிலே பற்பல காவியங்கள் தோன்றிய காரணத்தால் அதன்படி நடக்க ஆற்றலுறும் நாம் அன்னோர் கூற்றைக் குற்றமறக்கற்றுக் குணமென்னும் குன்றேறி நின்று பண்பெனும் பாலைதயிலே, வாழ்க்கை எனும் துலாக்கோலான் நடத்திக் கருத்துரை காவியங்களைக் கற்றுச் சிறப்புறும் நாள். எந்நாளோ, அந்நாளே தமிழரின்—தமிழ் மாணவர்களின்—நாடு போற்றும் நன்னாளாகும்.

—'இரத்தினவேல்'

# "ஊழ்"

ஊழ்வினையாம் சுழி சுழித்தலைத்தது, உலகத்திலுதித்த ஒரு சிலரை, நல்ல வினையால் நாடு போற்றுகின்றது; தான் செய்த முன்வினை எழேழு பிறவியும் தன்முன் வந்து நிற்குமன்றோ? பாராளும் வேந்தனும் குடிசைக் குப்பனும், பீதாம்பரப் பிரபுவும், கந்தைக் காளனும், நெய் உண்ட நிகரற்றோனும் கூழ் குடித்த குறையற்றோனும், தம் வினையைத் தாமே அனுபவிக்க நேரிடுகிறது!

அவ்வாறிருக்க, மண்ணினால் மனக் கோட்டை கட்டி விடலாம், அறிவினால் ஆகாயத்தை அறியலாம், சூழ்ச்சியினால் சுகத்தைப் பெற்று விடலாம், பேச்சினால் பெருமை அடையலாம், பொய்யினால் புகழைப் பெறலாம், வீண் வார்த்தையினால் வெற்றியடையலாம் என்றால், விதிவசம் எப்படியோ விள்ளாய்!

தன் தன் வாழ்வு தகைமையுடன் நடக்காத காரணத்தால் நகரம் நரகமாயும், பழைமை பாழுற்றும், குடிப்பண்பு குணமற்றும் புகழ் புதையுண்டும், அறிவு ஆற்றல் இழந்தும், ஒழுங்கம் ஓய்வு பெற்றும், முயற்சி மூர்ச்சையடைந்தும், முன்னேறும் நோக்கு முதுமையடைந்தும் போகின்றனவே, இப் பொய்யான வாழ்வின் புகலிடம் இதுதானே!

பட்டம் பதவிக்குப் பகைமூள்கிறது, பகைமை மூலமாய்ப் படுதுயர் அடைகிறது. முயற்சியினாலும் முற்போக்கு இல்லை, சூழ்ச்சியினாலும் சுகம் இல்லை, பொறுமையினாலும் பொங்கும் மகிழ்வு இல்லை, வீரத்தாலும் வெற்றியில்லை, வெற்றிமடந்தை வீடு தேடி வரட்டும் என வாளாவிருக்கும் ஒருவன் உழைப்பின் உயிர் நாடி ஊழ் என்று எண்ணுவானேயன்றி, முயற்சி திருவினையாக்கும் என்பதையா மேலும் மேலும் மேலும் எண்ணிக் கொண்டு இருந்திருப்பான்!

சிறு பொழுதில் சிந்தனை செய்தேன் சீருடன் வாழவேண்டுமென்று; அப்பொழுதே எண்ணினேன் சிதைந்தால் என் செய்வதெனவும்; ஒய்யாரமாய்ப் பேசினேன் ஒழுக்க உணர்வைப் பற்றி; ஓய்ந்தபோது யோசித்தேன், உலக உண்மையைச் சுலபமாய்ச் சொன்னேன்; சுகத்தின் எல்லையைச் சோர்வுடன் சூழ்ந்தேன்;

சூழ்நிலையின் சுழற்சியை எழிலின் இன்பத்தை இவ்வாறு துய்த்த நான் இல்லறத் தோணியில் ஏறி இதயபூர்வமாக நடத்தினேன், வறுமை எனும் வளப்பமற்ற போலிப்புயல் எங்கிருந்து இப்போது என்னை வீசி அலைக்கின்றது என ஏங்கி நின்று எண்ணினால் உயிர் உதவியற்றது, உடல் நிலையற்றது, முயற்சி முடிவுற்றது, எண்ணம் இணையற்றது, ஊழ்வினை ஒன்றே ஒல்லும் உயர்வுடையது எனத் துணிந்தேன்.

ஆம் புரட்டினேன் புத்தியில் புலப்பட்ட புத்தகத்தை; கண்டேன் காலத்தின் கருத்து வேறுபாட்டை; அழகுடன் குலவும் குயில் இருக்க, கோட்டான் ஏன் வாழவேண்டும், இது என்ன இயற்கையின் நியதியா? இறைவனின் செயலா? பண்டையோரின் பண்பா? பாமர மக்களின் பதற்றமா? அதுதான் என்ன?

முல்லைக் கொடிக்குத் தன் பொற்றேரைப் படரும் பந்தலாய் விட்டானே அதை எண்ணிப் பார். அதே நேரத்தில் குந்தக் குடிசையின்றி மழையில் நனைந்து, வாடையில் வதையும் வறுமையுள்ளோனையும் நோக்கு; தன் முந்நூறு ஊர்களையும் புலவர்க்கீந்த பாரியைப் பார், அவன் பக்கலிலுள்ள பரதேசியையும் நோக்கு; இரப்போர்க் குறிப்பறிந்து வேண்டுவன கொடுத்த கள்ளியை நாடு; புலவரைக் கண்டு நீர் வந்த காரணம் யாதென வினவிய செல்வனைச் சேர்; வாழ்வின் வகையறிந்து உலக உண்மையை உணர்ந்து உதவும் உண்மையுள்ள குமணனைப் போற்று; தீஞ்சுவைச் செந்தமிழின் இனிய பேச்சுக்களை மாசற்ற மனதில் வைத்திருந்தார் இனிய தம் மக்களிடம் கொஞ்சும் மகிழ்வு அற்று வறுமைக்கடலைக் கடந்து செல்ல முடியாச் 'சித்திரனாரைச்' சிந்தித்துப் பார். அந்துற்ற துன்பத்தால் சூழ்ந்த யாவரையும் ஆற்றும் இயல்புடையோனைக் காண், அப்பொழுதே உயிர் புறத்ததோ அகத்ததோ என இருந்த கர்ணன் தந்த கைப்புனலையும் கவனி! என்ன நினைக்கிறீர்கள் இப்பொழுது?

பொருளிலார்க்கு இவ்வுலகம் இல்லையல்லவா! புலவர் இலக்கியக் கடல் கடந்தும், வறுமைக் கடலை ஏன் கடக்க முடியவில்லை? வாழ்க்கை ஓர் வான வேடிக்கை, இவ் வேடிக்கையை வரம்புடன் நடத்து; வரம்பு மீறினால் வகை வாளாக இருக்குமென்பதை அறிந்துகொள். உலகத்தின் உயிர்நாடி ஊழ்வினை என்பதை மறவாதே, அவனன்றி ஓர் அணுவும் அசையாதன்றோ!

'சிவமுருகு'

நாகர்கோவில்

# ஆறுமுக நாவலர்

(முன் தொடர்ச்சி)

குழந்தையைத் தனது பெண் மகவு என மருண்டு நாவலர் "அம்மா! நான் மதுரையில் அல்லவா இருக்கிறேன். நீ எப்படி இங்கு வந்தாய்" என்றனர். அதற்கு மீனுக்ஷித் தாய் "நான் மதுரையில் தானே இருக்கிறேன். என்னை உனக்குத் தெரியவில்லையா?" என்றனர்; "இந்த அலங்காரமெல்லாம் உனக்குச் செய்தது யார்" என்றதற்கு "இவையெல்லாம் எனக்குரியதுதானே" என்றனள் அன்னை. உடனே குழந்தையை யெடுக்கும் ஆர்வத்தோடு மீனுக்ஷித் தாயின் அருகில் செல்லக் குழந்தை குதித்துப் பின்புறமாகவே சென்று மறைந்தது. அதன் பின்னர் நாவலர் தற்போதம் பெற்று, வந்தவள் மீனுக்ஷியெனவே உணர்ந்து தமது மதியீனத்துக்கு வருந்தி மயங்கிச் செய்வது தெரியாது திகைத்து நின்றனர். உடனே வெளியே வந்து கதவைத் திறந்ததும் இவரை அழைத்துச் செல்ல அம்மை கூறியவாறு கார் வந்து நிற்பதைக் கண்டு அதிசயித்துச் செட்டி நாடு சென்றனர். திரும்பவும் மதுரை வந்து பத்தாம் நாள் சொற்பொழிவாற்றும்போது மதுரை தேவஸ்தான அர்ச்சகர் உயர்திரு. கலியாண சுந்தரப் பட்டர் அவர்கள் நாவலரவர்கட்குப் பட்டுக் கட்டிப் பிரசாதம் வழங்கும்போது 'தென்னாட்டில் சைவம் பரப்பும் தனியாற்றலை உனக்கு நான் அளிக்கிறேன்' என ஆவேசத்துடன் கூறிப் பின் சுய உணர்வு பெற்று, 'அம்பாள் சொல்லச் சொன்னாள். நான் சொன்னேன்' என்றனர். அதுமுதல் நாவலரவர்கள் மதுரை மீனுக்ஷி சொக்கேசரை இமைப்போதும் மறவாது இணையடி போற்றிப் பரவி வரலானார்.

விஷம் நீக்கம்:

செந்தில் முருகன் திருவிழாவில் நாவலரவர்கள் சொற்பொழிவுகள் பல நிகழ்த்தி வந்தார்கள். அப்போது ஹரிகேச நல்லூர் சுப்பிரமணிய பிள்ளை என்ற வாலிபரும் சொற்பொழிவு கேட்டுக் கொண்டிருந்தார். சொற்பொழிவு முடிந்து தங்குமிடம் சென்று அவர் தமது படுக்கையை விரிக்க, அதன் உள்ளிருந்த பாம்பொன்று தீண்டியது. விஷம் தலைக்கேற அவர் மயங்கி விழுந்தார். அவருடன் வந்தவர்களிடம் 'நான் இறந்துபோவேன். என்னைச் சொற்பொழிவு செய்த ஐயா முன்னர்த் தூக்கிக்கொண்டு விடுங்கள்' எனக் கூறினர் அவர்களும் அவ்வாறே இவரை நாவலர் முன் கொண்டு சேர்த்தனர். செய்திகளறிந்த நாவலர் திகைத்து 'விஷமாற்று மந்திரமோ-மருந்தோ எதுவும் எனக்குத் தெரியாது. நீங்கள் இவரை உடனே ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போங்கள்' எனக் கூறினர்கள். அதன்பின் விஷம் தீண்டிய வாலிபரின் வேண்டுதலின்படி, நாவலரவர்கள் தேவாரம் பாடித் திருநீறு பூசச் சிறிது நேரத்தில் விஷம் நீங்கப் பெற்று வாலிபர் குணமடைந்தார். இதனை யாரிடமும் கூறக்கூடாதெனவும் நாவலர் கூறியும் எவ்விதமோ செந்தில் முழுதும் இவ்வற்புதம் பரவலாயிற்று. வாலிபனின் வீட்டார் நாவலர் அவர்களைத் தங்கள் ஊருக்கு அழைத்துப் பற்பல முறையில் உபசரித்தது பாராட்டு தற்குரியது.

மகப் பேறு:

சேலம் ஜில்லா, பாண்டமங்கலத்தில் ஆண்டுதோறும் சஷ்டி விழாவினை இனிது நடத்தி வரும் தனவந்தராகிய தருமகர்த்தர் உயர்திரு. சோமசுந்தரம் பிள்ளை அவர்களுக்கு நீண்ட நாட்களாகப் புத்திரப் பேறில்லாத குறையொன்றிருந்தது. இக் குறையை நினைத்து இவர்களது மனைவியார் மிக மிக வருந்திக் கொண்டிருந்தனர். ஓர் சஷ்டிவிழாவில் 6 நாட்கள் நாவலர் அவர்களின் சொற்பொழிவு அங்கு நடை

Phone. 55034 Tel. Enkayam
கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்,
53 கிடங்குத் தெரு, சென்னை 1.

பெற்றது. சொற்பொழிவு முடிவில் அனைவருக்கும் ஆசிர்வாதம் வழங்கும் வேளையில் அம்மையாருக்குக் குழந்தைப்பேறில்லாக் குறையை அகற்ற முருகனை வேண்டி ஆசிர்வதிக்க வேண்டுமெனக் கொடுமுடி ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மையார் அவர்கள் வேண்டினர். அப்போதிருந்த அம்மையாரின் கவலையை முகக் குறையால் உணர்ந்த நாவலர் அவர்கள் "அம்மா! கவலை வேண்டாம். உனக்கு அடுத்த ஷஷ்டிக்குள் ஆண் குழந்தை பிறக்கும்" என மொழிந்தருளினார்கள். அனைவரும் மகிழ்ச்சியில் ஆழ்ந்தனர். அவ்வாறே அடுத்த ஷஷ்டிக்குள் அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. இக்குழந்தைக்குச் சிவகுமாரன் எனப் பெயரிட்டுப் பெற்றோரும் மற்றோரும் பெருமகிழ்வெய்தினர்.

தேவகோட்டைப்பாலகவி வயிநாகாம் திரு வே. இராமநாதன் செட்டியார் அவர்கள் ஒருமுறை கன்னியாகுமரி முதலிய ஆலயங்களைத் தெரிசிக்கத் தமது மனைவியோடு நாவலரவர்கள் வீட்டில் விருந்தினராய் வந்து தங்கினார்கள். குமார கோவில் என அழைக்கப்படும் வேளிமலை முருகனைத் தெரிசிக்க அவர்கள் ஒரு பிளஷர் காரில் சென்றனர். செட்டியாரும் அவர் மனைவியும் அணிந்திருந்த 40,000 ரூபாய் விலை மதிக்கத் தக்க வைர நகைகளைக் கழற்றி ஓர் சிறு கைப் பெட்டியில் வைத்துப் பூட்டிக் காரில் வைத்துவிட்டுக் குளத்தில் வந்து நீராடினர். நாவலரவர்களும் இவர்கள் தங்கியிருக்க ஓர் வசதியான இடம் பார்க்கச் சென்று இவர்களோடு துறையில் வந்து நீராடினர். வைர நகைகளைப் பெட்டியில் வைத்தது நாவலரவர்களுக்குத் தெரியாது. பிளஷர் கார் கிளீனர் (Cleaner) பூட்டை உடைத்துப் பெட்டியைத் திறந்து நகைகளை வாரி எடுத்துக்கொண்டு ஓடத் தலைப்பட்டான். காரில் திருட்டு நிகழ்வதைக் குளித்துக்கொண்டிருந்த நாவலர் அவர்கள் திருமாருகன் உணர்த்த உணர்ந்து, திடீரென செட்டியாரைப் பார்த்து, "காரில் ஏதாவது சாமான்கள் வைத்திருக்கிறீர்களோ?" எனக் கேட்க, "ஆம், பெட்டி காரில் தான் இருக்கிறது. அதில் நகைகள் எல்லாம் வைத்திருக்கிறோம்" என்றனர். உடனே அதிவிரைவாக நாவலரவர்கள் ஓடி கார் நிற்கும் இடத்துக்கு வந்தனர். அவர் வரவைக் கண்ட கிளீனர் பயந்து எடுத்த நகைகளை மீண்டும் பெட்டியிலிட்டு மூடினான். பெட்டி உடைந்திருப்பதைக் கண்ட நாவலரவர்கள் சிலர் உதவியோடு கிளினரைக் கூட்டி வந்து செட்டியாரிடம் "உங்கள் நகைகளெல்லாம் சரியாய் இருக்கிறதா? பாருங்கள்" என, செட்டியாரும் அவர் மனைவியும் வந்து பார்த்து, பெட்டி உடைந்திருப்பதையும், நகைகள் முன் வைத்த முறை மாறி, சிதறிக் கிடப்பதையும் பார்த்து, இவ் விஷயத்தை நீராடிக்கொண்டிருந்த நாவலர் அவர்கள் எவ்வாறு அறிந்தனரோ! என அதிசயத்து நின்றனர். "நகைகள் எல்லாம் சரிதான். ஒன்றும் எடுக்கவில்லை" என்றார் செட்டியார். "ஏதாவது திருடப்பட்டிருக்கலாம். நன்றாய்ப் பாருங்கள்" என நாவலர் கூற செட்டியார் பர்ஸைத் திறந்து பார்த்து அதில் வெளியில் வைத்திருந்த ஒரு 10 ரூபாய் நோட்டு மாத்திரம் காணவில்லை எனக் கூறினர். வேறு எல்லாப் பொருளும் இருப்பதையறிந்து, கிளீனரை அனுப்பிவிட்டு, எல்லோரும் கோயிலுக்குச் சென்று வழிபட்டனர். இறைவன் திருமுன்னர்ச் சென்றநாவலர்குமாரக் கடவுள் தண்ணீருக்குள் காட்சியளித்து "வண்டியில் திருட்டுப் போகிறது, ஓடிப்போ" என அருள் புரிந்த திருவருட் செயலை நினைந்து மனமுருகி மெய் சிலிர்க்க கண்ணீரும் கம்பலையுமாய் நின்றனர். எல்லோருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. செட்டியார் அவர்களும் மனைவியாரும் இவ்வதிசயச் செயல்களை அனுபவித்து வியந்து முருகனை வேண்டி நின்றனர். பின்னர் மகப்பேறில்லாக்குறை நீங்கி பல புத்திரர்களைப் பெற்று எல்லாச் சிறப்புகளுடனும் இனிது வாழ்ந்து வரலாயினர்.

---

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

தன்மையும் நீரின் இயல்பு, சராசரிச் செறிவும் கணிக்கப்படும், நீரின் தன்மையினை உற்று நோக்கின் அதன் இயல்புகள் அத்தனையும் பெரியோரின் இயல்புகளோடு பொருந்தும், எனவே நீர்மைச் சொல் பெரியோர்க்கும் அவர் வழிவந்த ஒழுக்கத்துக்கும் ஆகியதென்றுணர்க.

---

Telegrams: "RAMBROS"

**N. Ramu Bros,**

GENERAL HARDWARE

MERCHANTS

AVANASHI ROAD,

COIMBATORE.

# நீரினியல்பு

'மூர்த்தி'

"நல்லார் ஒருவருக்குச்........ நீர்மேலெழுத்துக்கு நேர்" என்ற பாட்டில் மாணவர்கள் தங்கள் உள்ளத்தினைப் பதியவிட்டிருந்தனர். படிப்பில் மனத்தைச் செல்லவிடாமல் பக்கத்துப் பிள்ளைகளை வம்புக்கிழுத்து வேடிக்கையாகப் பேசி மகிழ்வதையே பிறவிப் பயனாகக் கருதிய ஒரு மாணவன் திடுமென எழுந்து நின்றான். பாடத்தின் முடிவில் ஐயங்களைத் தீர்த்துக் கொள்ள மாணவர்கட்கு ஐந்து நிமிடங்கள் அளிப்பது வழக்கம். அன்று வம்புப் பையன் எழுந்து நின்றதால் வியப்புமேலிட்டவனாய்—என்ன? என்றேன். அவன் தனக்கேயுரிய மொழியில் 'சார், நீர்மேலெழுத்துக்கு நேர் என்றீர்களே சார். தண்ணிமேலே எழுதினால் விரலுக்கு நீர் விலகிப் போவுதே சார். ஏன் சார்?' என்று நிறுத்தினான். அவன் கேட்டதன் விளக்கம் என்ன என்கிறீர்களா? நிலைப்பொருளின் மீது கையை வைத்தழுத்தினால் அதிலுள்ள சக்தியானது கையை எதிர்த்து நிற்கும். பொருளும் விலகுவதில்லை. நீர்ப் பொருளானது கைக்கு இணங்கி விலகிப் போகக் காரணம் என்ன? அப்படியானால் நீரினியல்பு யாது? என்பதே. எனக்கு ஒரே மகிழ்ச்சி. ஆசிரியர் நல்ல அழகிய பூரித்த உள்ளம், உடல் இரண்டும் உடையவர் என்றால் அது அவருடைய செல்வ வளத்தையோ, குடும்பக் கவலையின்மையையோ காட்டுவதில்லை. அவரிடம் படித்த மாணவர்கள் உயரிய நிலையிலிருப்பதைக் கேள்விப்படுவதும், படிக்கும் மாணவர்கள் உயரிய நிலையிலிருப்பதைக் கேள்விப்படுவதும், படிக்கும் மாணவர்கள், கேள்விக்குத் தக்க விடையளித்து நல்ல குறியீடு (Marks) பெறுவதுமேயாம். என்னையறியாமலே ஒரு சுற்றுப் பருத்தும் விட்டேன். எனவே, மகிழ்ச்சி மீதூர அம் மாணவனுக்கு நீரினியல்பினைப் பற்றி விளக்கத் துணிந்தேன்.

காற்றுந் தண்ணீரும், அவற்றின் தன்மையுடைய பிற பொருள்களும் மேலைநாட்டறிஞரால், ஓட்டப் பொருள் இயங்கு பொருள் (Fluids) எனவும், மண், கல் முதலியவை கட்டிப் பொருள்கள், நிலைப் பொருள்கள் என்றும் கூறப்படுகின்றன. நிலைப் பொருளின் சமநிலையைப் பற்றி நிலையியல் (Statics) என்ற நூலும், சொல் பொருளின் சமநிலையைப் பற்றி நீரியல் (Hydro statics) என்ற நூலும் பேசுவன.

நிலைப் பொருளின்மீது கையை வைத்து அழுத்தினால், அதிலுள்ள சத்தியானது கையை எதிர்த்து நிற்கும். பொருளும் விலகிப்போவதில்லை. நீர்ப்பொருளானது கைக்கு இணங்கி விலகிப்போகும்.

நீரானது தன் மட்டமறியும். இஃது அறிஞர்கள் கண்ட உண்மை. ஒன்றோடொன்று இணைக்கப்பட்ட கண்ணாடிக் கிண்ணங்களுள் ஒன்று நேராகவும் மற்றொன்று வளைவாகவும் இருந்தாலுங்கூட ஒன்றின்வழியாக விடப்பட்ட தண்ணீர் எல்லாவற்றிலுஞ் சென்று ஒரே மட்டத்தில் நிற்கும். இதனாற்றான் நிலமட்டத்தின் நேர்மையை அறிவதற்கு நீர் மட்டக் கருவி (Water level) அமைக்கப்பட்டுள்ளது.

நீர் மட்டம்:

நில அளவையர் (சர்வே செய்பவர்கள்) இதனைப் பயன்படுத்துவர். இரு கண்ணாடிக் குழற் கிண்ணங்கள் இருபுறமுடைய குறுக்குக் குழாயொன்று ஒரு முக்காலியின் மேல் ஏற்பட்டிருக்கும் தண்ணீரை நடுக்குழாயில் ஊற்றியவுடன் அஃது இரு முனைக் குழாயிலும் ஒரே மட்டத்தில் ஏறி நிற்கும். இரு குழாயிலும் உள்ள நீர் மட்டத்தை இணைக்கும் கோடானது நேர்க் குறுக்காக இருக்கும் (Horizontal) அக்கோட்டின் நீளத்திலுள்ளன சம நிலையிலிருப்பதாகக் கருதப்படும். ஸ்பிரிட் (ஆவிநீர்) மட்டம் (Spirit level) என்ற கருவியானது வளைவாக இருக்கும். அதில் ஸ்பிரிட் என்ற நீர்ப் பொருள் நிறைக்கப்பட்டு இருபுறமும் மூடப்பட்டிருக்கும். அதில் ஒரு நீர்க்குமிழியுண்டு. அது கருவியின் நடுவில் நின்றால் கருவி வைக்கப்பட்ட இடம் சம அளவில் இருப்பதாகக் கருதப்படும். இக்கருவியினை வீடு கட்டும் கொல்லரிடத்திலும் காணலாம்.

நீர்ப்பொருள் எல்லாப் பக்கத்திலும் ஒரே விதமான அழுத்தத்தையே தருவன எடுத்துக்காட்டாக நீரில் மூழ்கிய பொருள்களின் எப்பக்கமும் நீரினழுத்தம் ஒரு தன்மையதாகவே இருக்கும் ஏதானுமொரு ரப்பர் பந்தினில் தொளையிட்டுப் பந்து நிறைய நீர் ஊற்றி ஒரு விரலினால் துவாரத்தினை மூடிக் கொண்டு ஒரு குண்டூசியினால் பந்தின் பக்கங்களிற் குத்திப் பந்தைப் பெருவிரலுக்கும் மற்றொருவிரலுக்கும் நடுவே வைத்துப் பிதுக்கினால் குண்டூசித் துளைகள் எல்லாவற்றின் வழி ஒரே தூரத்தில் விசைவாகத் தண்ணீரத் துளிகள

வெளியே பாய்வதைப் பார்க்கலாம். நீரினைப் போலவே காற்றிலும் எல்லாப்பக்கத்திலும் ஒரே தன்மையான அழுத்தமே உண்டு.

ஒரு பாத்திரத்தின் மேற்புறத்தின் மீதுள்ள அழுத்தம் மற்றொரு பெரிய பாத்திரத்துக்குச் செல்லுங்காலை, அதன் அளவுக்குத் தக்கவாறு அதிகப்படும்.

சிறிய பாத்திரத்திலுள்ள தண்ணீரில் மேல் தண்டோடு கூடிய மூடி பொன்றும், பெரிய பாத்திரத்தில் அவ்வாறு மூடியொன்றும் இருப்பதில் முன்னதிலுள்ள தண்டை அழுத்தினால் அதிலுள்ள நீர் பெரிதிற் சென்று அதன் மூடியை மேலே தள்ளும்; அப்படித் தள்ளாமலிருக்கத் தள்ளுஞ் சக்தியை எதிர்க்கக் கூடிய கனமான பொருள் ஒன்றினைப் பெரிய பாத்திரத் தண்டின்மேல் வைக்க வேண்டும். சிறிய பாத்திரத் தண்டின்மேல் வைக்கும் பொருளின் கனத்தைப் பார்க்கிலும், பெரிய பாத்திரத் தண்டின் மேல் வைக்கும் பொருளின் கனம் அதிகமாக இருக்கவேண்டும். அது எவ்வளவு அதிகமிருக்க வேண்டுமெனில் சிறிய பாத்திர மூடியினும் பெரிய பாத்திர மூடி எவ்வளவு பெரியதோ அத்தனை மடங்கு கனம் வேண்டப்படும். ப்ரமாப்பிரஸ் (Bramah Press) என்ற இயந்திரம் இக்கருத்தனை அடிப்படையாகக் கொண்டது. அது தானும் இணைக்கப்பட்ட சிறு குழலுமுடையது. சிறு குழலிலுள்ள தண்டினை அழுத்தினால் பெரிய குழல் மீதுள்ள தண்டு மேற்கிளம்பும். அத்தண்டின் மேல் ஒரு அகன்ற தட்டும். அத்தட்டு மேலெழும்பித் தொடக்கூடிய விட்டம் ஒன்றும் உண்டு. அத்தட்டின்மேல் வைக்கும் பொருளை மேலெழுந்த தண்டானது விட்டத்திற் பொருத்தி அழுத்தவே பஞ்சு மூட்டை முதலியன நன்றாக அழுத்தமுற்றுச் செப்பனிடப்படும்; அவ்வாறே பிரமாப்பிரஸ் போன்ற ஜாக்கி என்னும் இயந்திரத்தில் தண்ணீரின் ஆற்றலால் இயந்திரத் தண்டின் மீதுள்ள பெருந்தேரினையும் மேலே எழுப்புவதை யாவரும் அறிவர்.

தண்ணீரின் மேற்புறத்தினைப் பார்க்கிலும் ஆழமான அடிப்புறத்தில் தண்ணீரின் அழுத்தம் அதிகப்படும். அவ்வாறே தண்ணீரினுங் கனமான நீர்ப்பொருள்களினுள்ளே, தண்ணீரின் அழுத்தத்தினும் அதிகமான அழுத்தம் காணப்படும். ஆழத்தைப் பொறுத்தும் நீர்ப்பொருளின் கனத்தைப் பொறுத்தும் அழுத்தம் அளவுக்களவு மிகுதிப்படும்.

தண்ணீரில் ஒரு கட்டிப் பொருளை மூழ்கும்படி செய்யின் அதன் நிறை குறைந்ததுபோற் காணப்படும். அப்பொருளினளவு உள்ள தண்ணீரின் கனம் குறைவுபடும்; அவ்வளவு தண்ணீர் விலகி நின்று பொருளை மேலே தள்ளும். அங்ஙனந் தள்ளும் ஆற்றல் பொருளின் கனத்தைக் குறைத்துக் காட்டும். இஃது ஆர்க்கிமிடிஸ் (Archimedes) என்னும் பேரறிஞராற் கண்டுபிடிக்கப்பட்டது. தண்ணீரிற் போட்ட பொருளின் கனம் அப்பொருளினளவு தண்ணீரின் கனத்தைப் பார்க்கிலும் குறைவாயிருந்தால், அத்தண்ணீரின் கனமானது பொருளை மேலே தள்ளுதலால் அது அமிழாது மிதக்கும். பொருளின் கனம் அதனளவு தண்ணீரின் கனத்திலும் அதிகமாயிருப்பின் அது தண்ணீருள் அமிழும். இரண்டுஞ் சமமாயிருந்தால், பொருளின் மேற்புறம் தண்ணீரின் மேற்புற மட்டத்தில் தோன்றும்.

ஒரு பொருளின் செறிவு (Density) அது இடப்பட்ட நீர்ப்பொருளின் செறிவினும் குறைவானால் முன்னது பின்னதில் மிதக்கும். தண்ணீரில் மிதவாத சாமான் ரசத்தில் மிதக்கக்கூடும். அங்ஙனம் மிதக்குங்கால் மிதக்கும் பொருள் காரணமாக விலகிய ரசத்தின் கனம், மிதக்கும் பொருளின் கனத்திற்குச் சமமாக இருக்கும். நீர்ப்பொருளின் கனத்துக்குத் தக்கபடி விலகும் பகுதியின் அளவு குறையும். ஒரு மரத்துண்டினைத் தண்ணீரில் போட்டால் அது மிதக்கும்போது விலகும் தண்ணீரின் அளவு, அது ரசத்தில் மிதக்குங்காலை விலகும் ரசத்தினளவினும் மிக அதிகமாயிருக்கும். மிதக்கும் பொருள் தண்ணீரில் மூழ்கும் அளவு ரசத்தில் மூழ்காது.

கட்டிப் பொருள்களின் செறிவு வேறுபாடுகளைத் தண்ணீரில் வைத்து அளந்தறியலாம். செம்புத் துண்டு ஒன்றைக் காற்றில் நிறுத்துப் பார்த்தபின் தண்ணீருள் அதனைத் தொங்க விட்டிருந்தால் அதன் கனம் குறைவுபடும். இரண்டிற்குமுள்ள வேறுபாடு, தொங்கவிட்ட பொருளினளவு தண்ணீரின் கனமாகும். செம்புத்துண்டின் கனத்தை அதனளவு தண்ணீர்க் கனத்தால் வகுத்தபோது ஏற்படும் கனமே, அதன் சராசரி செறிவு (Relative density) என்று கூறப்படும். இவ்வாறே நீர்ப்பொருளின்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# “செந்தமிழின்பத் தேன் வார்க்கும் சேதுப் பெருமகனார்”

முகில்வண்ணன்

தமிழ்த் தொண்டே தலைத் தொண்டாகக் கொண்டு, தமிழ் மொழியின் வளமே தமிழ்ச் சமுதாயத்தின் வளமென நினைந்து, நினைப்பை முனைந்து செயலாற்றி வெற்றிகண்ட தமிழ்ப் பேரறிஞர்கள் எண்ணற்றவர். அல்லும் பகலும், ஊண் உறக்கம் மறந்து தான் வளர்த்த முயற்சி எனும் முல்லைக்கொடியிலே வெற்றி எனும் மணமலர் அரும்பிய காட்சியுடனே மகிழ்வெய்தி மண்ணகம் துறந்து விண்ணகம் ஏகிய தமிழ் வித்தகரும் பலராவர். ஆனால் வெற்றி முல்லை யரும்பி மலர்ந்து மணம் பரப்புவதை முழுதும் கண்டு களிப்புறும் பேறு பெறுபவர் சிலரே. அந்தச் சிலருள் ஒருவர்தான், சொல்லின் செல்வர், செந்தமிழைத் தேனாக வடித்து நமக்கு வார்த்துத் தரும் பேராசிரியர் திரு. சேதுப்பிள்ளை அவர்கள்.

‘செந்தமிழ் நாடெனும்
போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே’

என்று தமிழ் உணர்ச்சியும், தமிழ்ப் பற்றும், நாட்டுப் பற்றும் நலிவடைந்திருந்த அந்தக் காலத்திலே பாரதியார் வீரமுரசு கொட்டினார். ஆனால் அந்த வரிகளைச் சிறிது மாற்றி,

‘செந்தமிழ் இன்பெனும்
போதினிலே இன்பத்
தேன் வந்து பாயுது வாயினிலே’

என்று பாடினால் சாலப் பொருத்தமுடைத்தே. ஏனெனில் இன்று மக்கள் துயிலெழுந்துவிட்டனர் உண்மையான, வளர்ச்சிக்கு உறுதுணையான தமிழார்வம் பொங்கி எழுந்து வருகின்றது, மக்கள் உள்ளத்தினின்றும். இந்த ஆர்வம் பெருக்கெடுத்தோடப் பெரும் பணியாற்றிய தமிழ்ப் பேரறிஞர்களுள், செந்தமிழ்ச் செல்வர் சேதுப் பிள்ளையும் ஒருவர்.

‘சேது’ என்று சொல்லைச் செவிமடுத்த உடனே, நமது கண் முன்னே தோற்றுவது சக்கரவர்த்தித் திருமகனும் அவனது படையினரும் சேர்ந்து சமைத்த, அக்கரைக்கும் இக்கரைக்கும் இணைப்பு ஏற்படுத்திய ‘பாலம்’ தான். ஆமாம் சேதுப் பிள்ளை அவர்களும் ஒரு தங்கத் தமிழ்ப் பாலமாகத்தான் செயல்படுகின்றார். அந்தத் தமிழ்ப் பாலத்தின் துணைகொண்டு, தமிழ்க் கடல் கடந்த தமிழர்தான் எத்தனை! மற்றொரு கோணத்தின்று நோக்கினும், ‘சேது’ என்ற பொருள் முற்றிலும் பொருத்தமுடைத்தாய்த் தோற்றுகின்றது பதினெட்டாம் நூற்றாண்டு வரை ஓங்கி வளர்ந்துவந்த தமிழ், பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டுகளில் ‘இறங்கு முகம்’ நோக்கிச் செல்லத் தொடங்கியது. ஒரு பக்கம்—அக்கரையிலே—பண்டிதப் பெருமக்கள் தமிழைச் சுற்றி நான்கு புறமும் இலக்கணக் கோட்டை கட்டி உள்ளே யாரும் புகுந்துவிட முடியாதபடி கண்ணிமைக்காது காவல் புரிந்து வந்தனர். மற்றொரு பக்கம்—இக்கரையிலே—பாமர மக்கள், பண்டித வீரரைக் கண்டு பயந்து ‘வீதியிற் போகின்ற வம்பை விலைக்கு ஏன் வாங்க வேண்டும்’ என்ற பாவனை கொண்டு, மொழி இன்பம் துய்ப்பதைத் துறந்துவிட்டனர் இந்த நிலையில் தென்பாண்டி நாட்டிலே, திக்கெட்டும் புகழும் திருநெல்வேலிச் சீமையினின்றும், ‘ஆங்கில வழக்காடுவதைத் துறந்து, தமிழ்ச் சொல்லாடுவதை’ ஏற்று அறிஞர் பலர் முன்வந்தனர். இந்த அறிஞர் பெருமக்களுள் இரசிகமணி டி. கே. சி. அவர்களும், பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களும், கால்நடை மருத்துவத் துறையிலே பணியாற்றியும் கம்பன் புகழ் பாடிய வெள்ளக்கால் ப. சுப்பிரமணிய முதலியார் அவர்களும் பாமரரையும் பண்டிதரையும் இணைக்கும் பொற் பாலங்களாகச் செயலாற்ற ஓடோடி வந்தனர்.

வெள்ளக்கால் முதலியார் அவர்கள், ஆண்டாலும் அறிவாலும் மூத்தவர் இன்று புகழுடம்புடன் வாழும் தமிழ் வித்தகர். அவர்களே சேதுப்பிள்ளை அவர்களைப் பாராட்டி, “அருந்தமிழன்னைக்குப் பெரும்பணி புரிந்து விளங்குவோருள்ளே சிறந்தார் ஒருவராய், நெடுங்காலமாய்ப் பாமர ரஞ்சகமும் பண்டித ரஞ்சகமும் ஒருங்கு பொருந்தப் பேசியும் எழுதியும் வருபவர்” என்று வியந்தேத்தி உள்ளார்கள் என்றால், பிள்ளை அவர்களின் பெருமைக்கு வேறு சான்று வேண்டுமோ?

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர், தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம்; மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.)